சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

Case No. OS.38/2021

2023ம் ஆண்டு அக்டோபர் மாதம் 19ம் நாள் வியாழக்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திரு.வி.ரவிசந்தின், தலைமைஎழுத்தர் என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| பெயர் | தரணி | தொழில் | |
|---|---|---|---|
| தந்தை/கணவர் பெயர் | ராஜேந்திரன் | ஜாதி | |
| கிராமம் | ஆரணி | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | |

19.10.2023 முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 23.11.2019 தேதியிட்ட ரூ.3,00,000/- அசல் கடனுறுதிச்சீட்டு **வா.சா.ஆ.1** (பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையில்லை) குறியீடு செய்யப்படுகிறது. 03.12.2020 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.2,** திருப்பப்பட்ட அஞ்சலக உறை **வா.சா.ஆ.3** குறியீடு செய்யப்படுகிறது.